20-01-2025.
S.C.No.11/2021

Crl.M.P.No.4465/2023 மனுவானது 11.12.2023 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.5 தமிழரசி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி குறுக்கு விசாரணை

அசா1 கற்பகம் எனது பக்கத்து வீட்டுக்காரர். சம்பவம் நடந்தபோது நான் போய் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வேலைக்கு போய்விட்டு வரும்போது பார்த்தேன். எதிரி கத்தியால் குத்தியதை நான் நேரடியாக பார்த்தேன். சங்கிலி வீட்டுக்கு முன்னால் நான் நின்று கொண்டிருந்தேனா என்றால் நான் வேலைக்கு போய்விட்டு வந்து நின்றிருந்தேன். என்னுடைய தெருவும், சங்கிலி தெருவும் வேறு வேறு தெரு என்பதால் நான் சங்கிலி வீட்டு முன்பு நிற்க வேண்டிய அவசியம் என்ன என்றால் நான் வேலைக்கு போய்விட்டு அந்த வழியாகத்தான் எங்கள் தெருவிற்கு வரவேண்டும். சண்டை நடந்ததால் அங்கு நின்றேன். என்னைத் தவிர அந்த சம்பவத்தை எத்தனை பேர் பார்த்தார்கள் என்றால் என்னுடன் வேலை முடித்துவிட்டு வந்த இரண்டு பேர் என்னுடன் சேர்ந்து பார்த்தார்கள். அவர்கள் பூங்கொடி, விஜயலட்சுமி. சங்கிலி வீட்டு முன்பு சாக்கடை வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் இல்லை. சங்கிலி குத்தும்போது விலக்கிவிட்டோமா என்றால் விலக்கவில்லை. எந்த ஒரு சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும் என் தெருவுக்கும் சங்கிலி தெருவுக்கும் சம்மந்தமே இல்லை என்றும் அசா1 என் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை மறுநாள் வந்து விசாரித்தார்கள். 2,3 தடவை விசாரித்தார்கள். அந்த கத்தி கறி வெட்டும் கத்தி. கறி வெட்டும் கத்தி என்றால் இரும்பு பிடி போட்டிருப்பார்கள் என்றால் சரிதான். கத்தியை பார்க்கவில்லை என்றும் போலீசார் கத்தியை காட்டி சாட்சியம் அளிக்கச் சொன்னதால் அவர்களுக்கு

ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.20 16:57:04 +0530

Principal District Judge,
Dindigul.